**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**29 ஜனவரி 2016 / 19 ரபீவுல் ஆகிர் 1437**

# நமக்குப் பாதுகாப்பு அரணாக இருக்கும் நல்ல மதிப்பீடுகளை ஏற்படுத்திக் கொள்வது

الْحَمْدُ لِلَّهِ الَّذِي أَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدَى وَدِيْنِ الْحَقِّ بَشِيْرًا وَنَذِيْرًا
وَدَاعِيًا إِلَى اللَّهِ بِإِذْنِهِ وَسِرَاجًا مُنِيْرًا وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
وَصَفِيُّ اللَّهِ مِنْ خَلْقِهِ وَحَبِيْبُهُ إِمَامُ الأَنْبِيَاءِ وَسَيِّدُ الْمُرْسَلِيْنَ اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا.
أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللَّهِ اتَّقُوْا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ
مُسْلِمُوْنَ

மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவும், அவன் தடுத்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான "தக்வா" வின் உணர்வை ஏற்படுத்திக் கொள்வோமாக!

அல்லாஹ்வுக்குத் தொடர்ந்து அடிபணிந்து நடந்து கொள்வோமாக! இஸ்லாம் போதித்துள்ள சிறந்த மதிப்பீடுகளின் மூலம் நமது வாழ்க்கையை அலங்கரித்துக் கொள்வோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமது நற்காரியங்களை ஏற்று, அவனது மன்னிப்பையும் கிருபையையும் நமக்கு வழங்குவானாக!

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

கடந்த ஜனவரி மாதம் முழுவதும், வெள்ளிக்கிழமைப் பிரசங்கங்களில் மன்னித்தல், மன்னிப்பைத் தேடுதல், மற்றவர்களை மன்னித்தல் ஆகியவற்றின் சிறப்பைப் பற்றி விவாதிக்கப்பட்டது. நமது உள்ளங்கள் மன்னிப்பவையாக ஆகி விட வேண்டும்; நமது உணர்ச்சிகளையும் இச்சைகளையும் தோற்கடித்து, அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளும் ஆற்றல் மிக்கவையாக ஆகி விட வேண்டும்; அன்பையும், மனிதர்களுக்கு மத்தியில் நல்ல உறவுகளையும் விரும்புபவையாகவும் நமது உள்ளங்கள் ஆகி விட வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு விவாதிக்கப்பட்டது.

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கின்றார்கள்:

لَيْسَ الشَّدِيدُ بِالصُّرَعَةِ، إِنَّمَا الشَّدِيدُ الَّذِي يَمْلِكُ نَفْسَهُ عِنْدَ الْغَضَبِ

பொருள்: மல்யுத்தத்தில் சிறப்பாக செயல்படுபவர் வீரர் அல்ல; எவர் கோபத்தின் நேரத்தில் தனது மனதைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளாரோ அவரே வீரர் ஆவார். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

ஜமாஅத்தார்களே!

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களால் போதிக்கப்பட்டுள்ள நல்ல மதிப்பீடுகளை உண்மையாக அறிய முற்படுவோமாக! அம்மதிப்பீடுகள், ஒருவரது சன்மார்க்க வாழ்க்கையின் அடிப்படையாக அமைவது அவசியமாகும். மன்னிப்பது போன்ற குணநலப் பண்புகள் முஸ்லிமின் நடத்தையை அமைப்பதாக இருக்க வேண்டும். நமது நோக்கம், திருக்குர்ஆனில் அல்லாஹ்வினால் சங்கை செய்யப்பட்டுள்ள இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் நடத்தையை ஆர்வத்துடன் பின்பற்றுவதாக இருக்க வேண்டும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கூறுகிறான்:

وَإِنَّكَ لَعَلَىٰ خُلُقٍ عَظِيمٍ ٤

பொருள்: (நபியே!) திண்ணமாக நீர் நற்குணத்தின் மிக உன்னதமான நிலையில் இருக்கின்றீர். (அல்-குர்ஆன்: அத்தியாயம்: அல்-கலம், வசனம்:4)

எனவே, நாம் எப்போதும் நமது செயல்பாடுகள் மற்றும் நாம் மொழிகின்ற வார்த்தைகளின் விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். நமது வார்த்தைகள் மற்றவர்களைத் துன்புறுத்துபவையாக உள்ளனவா? அவர்களின் உரிமைகளை நாம் பறித்துக் கொண்டோமா? விஷயங்களைக் கடினமாக்குகின்றோமா? நமது கருத்துக்களை மற்றவர்களிடம் திணிக்க முற்படுகின்றோமா? என்றெல்லாம் சிந்தித்து, அவ்விஷயங்களில் நாம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். காரணம், நமது மார்க்கம் மேற்கண்ட விஷயங்களுக்கு மாற்றமாக நமக்குப் போதிக்கின்றது. கடந்த வாரப் பிரசங்கங்களில் விவாதிக்கப்பட்டது போன்று மன்னிப்பதென்பது கருணைச் சிந்தனையுடன் தொடர்புடையதாகும். ”இஹ்ஸான்” எனும் கருணைச் சிந்தனை நாம் மேன்மையை அடைவதற்குக் காரணமாகின்றது. கருணைச் சிந்தனையின்றி, வெற்றிமிக்க, மேன்மையான சமுதாயத்தை உருவாக்கும் ஆற்றலை நாம் பெற முடியாது.

நம்மிடம் மன்னிக்கும் மனப்பான்மையும், கருணைச் சிந்தனையும் காணப்படவில்லையெனில் கொடூரத் தன்மை நம்மிடம் மிகைத்து, அவை நம்மை வழிநடத்த முற்படும். ஒருவரின் உள்ளத்தில் கொடூரத்தன்மை வேரூன்றி விட்டால் அவர் மற்றவர்களை வெறுக்க முற்படுவார். வெறுப்புணர்வானது, நம்மைத் தனிமைப்படுத்திடவும், பன்முகத்தன்மையை புறக்கணிக்கவும் தூண்டும். அந்நிலையில், நம்மிடம் வன்முறைச் சிந்தனைகள் குடி கொண்டு, அவை நம் மீது எளிதில் ஆதிக்கம் செலுத்தும். அதனைத் தொடர்ந்து இரத்தம் சிந்துதல் ஏற்படலாம்; அது நமது அழிவுக்குத்தான் காரணமாகும். இதற்காகத் தான் நமது பாசத்திற்குரிய ரசூலுல்லாஹி(ஸல்) அனுப்பப்பட்டார்களா? இதற்குத் தான் அருள் மறையாம் திருக்குர்ஆன் அருளப்பட்டதா? இதற்காகத் தான் நாம்

பள்ளிவாசல்களையும் மத்ரஸாக்களையும் கட்டுகின்றோமா? என நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

இல்லை. நிச்சயமாக இல்லை. எனினும், சமீபக் காலங்களில் நிகழ்ந்த சில சம்பவங்கள் இஸ்லாத்தைப் பற்றி மாற்றமான, முறையற்ற சிந்தனைகளை மக்களிடம் ஏற்படுத்தியுள்ளன. எனவே, இஸ்லாத்தைப் பற்றிய அவர்களின் சிந்தனைகளைச் சரிசெய்வதும், இஸ்லாத்தின் உண்மையானத் தோற்றத்தை அவர்களுக்குக் காண்பிப்பதும் நம்முன் உள்ள மிகப் பெரிய கடமையாக உள்ளது. தவறான சக்திகள் நமது சமுதாயத்தை அழித்து விடாமலிருப்பதையும், சமுதாயத்தை ஒருங்கிணைக்கும் உறவுகளை சிதைத்து விடாமலிருப்பதையும் உறுதி செய்வதும் நமது கடமையாக உள்ளது.

அமைதியையும், அபிவிருத்தியையும் பாதுகாப்பது தான் நமது முக்கியப் பங்களிப்பாக உள்ளது.

சமீபத்தில், பல வெளிநாட்டு ஊழியர்கள் வன்முறைச் சிந்தனைகளால் ஆதிக்கம் செலுத்தப்பட்டதை முன்னிட்டு, அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். சில வாரங்களுக்கு முன்பு அலுவல்மிக்க மத்திய ஜகார்த்தாவில் தாக்குதல் தொடுக்கப்பட்டது. அதற்கு முன்பு இஸ்தான்பூலில் வன்முறைத் தாக்குதல் நிகழ்ந்தது. அதே சமயம், சண்டையிடும் போராளிக் கூட்டமாகிய ”ஐஎஸ் ஐஎஸ்” தொடர்ந்து கடுமையானத் தாக்குதல்களைத் தொடுத்து, பெரும் குழப்பதை ஏற்படுத்தி வருகிறது.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட சம்பவங்களெல்லாம், தீவிரவாதச் சிந்தனைகளின் பயம் தற்காலத்தில் உருவாக்கப்பட்ட கதைகள் அல்ல; கற்பனை செய்து பரப்பப்பட்ட வதந்திகளோ, பழங் கதைகளோ அல்ல எனச் சுட்டிக் காட்டுகின்றன. இந்த எதார்த்த நிலை உலக சமுதாயத்தை கவலைக்குள்ளாக்கியுள்ளது. மனிதர்கள் அனைவர் மீதும், குறிப்பாக, முஸ்லிம்கள் மீதும் மிகப் பெரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

நமது மார்க்கத்தின் புனிதத்தைப் பாதுகாப்பதற்காக, நமது நன்னடத்தைகள் எனும் அரண்களை அனைவரும் இணைந்து பலப்படுத்துவோமாக! நமது பாசத்திற்குரிய ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களால் பரப்பப்பட்ட போதனைகளைப் பாதுகாப்போமாக! நமது நாட்டில் நாம் அனுபவிக்கும் அமைதிக்கு அச்சுறுத்துதலாக இருக்கும் சக்திகளுக்கு நாம் இடமளித்து விடக் கூடாது. சிலர், இஸ்லாத்தின் பெயரில் சில செயல்களைச் செய்கிறார்கள்; திருக்குர்ஆன் மற்றும் ஹதீதின் கருத்துக்களின் பொருள்களை தமது நிகழ்ச்சிக்குத் தக்கவாறு திரித்துக் கூறியும், வெறுப்பு மற்றும் தனிமையின் பக்கம் அழைப்பு விடுத்துக் கொண்டும் இருக்கின்றார்கள். அவர்களின் விஷயத்தில் நாம் மிகவும் உஷாராக இருப்பது அவசியமாகும்.

சன்மார்க்கத்திற்குக் களங்கத்தை ஏற்படுத்தி வரும் சக்திகளிலிருந்து இஸ்லாத்தைப் பரிசுத்தப்படுத்தும் பணியை முஸ்லிம்களைத் தவிர வேறு எவரும் செய்ய இயலாது. இஸ்லாமியப் போதனைகளையும், செயல்பாடுகளையும் தற்கால உலகின் எதார்த்த நிலைக்குத் தக்கவாறு நாம் பாதுகாப்பது அவசியமாகும். இஸ்லாம் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தி ஏற்பட உருதுணையாக உள்ளது; தொடர்ந்து ஒவ்வொரு

காலம் மற்றும் இடத்துக்கு பொருந்துவதாக உள்ளது என்பதை மனிதகுலத்துக்கு நிரூபிப்பதும் நமது கடமையாக உள்ளது.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

இது தான், இன்று நம்மை அழுத்தும் மிக முக்கிய விஷயங்களில் ஒன்றாக உள்ளது. முஸ்லிம்கள் விஷயத்தில் ஏற்பட்டுள்ள எதிர்மறையான, பொய்யான கருத்துக்களை மாற்றும் ஆற்றல் மிக்க மக்களாக ஆகுவதற்கு நாம் கடின முயற்சி செய்வோமாக! இது மிகவும் எளிதான காரியம் ஆகும். மன்னிக்கும் மனப்பான்மை போன்ற நல்ல மதிப்பீடுகளை உண்மையாகவே அறிவோமாக! அம்மதிப்பீடுகளை நம் உள்ளங்களில் ஏற்படுத்திக் கொள்வோமாக! நம்மிலும் நமது குடும்பத்தார்களிலும் அவற்றைப் பிரகாசிக்கச் செய்வோமாக! அவற்றை நமது பழக்க மாக்கிக் கொள்வோமாக! அப்போது நாம் இன்ஷாஅல்லாஹ், இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களால் காண்பிக்கப்பட்ட வழியின் பக்கம் நெருக்கமானவர்களாக ஆகி விடுவோம். அதன் விளைவாக, மக்கள் முஸ்லிம்கள் விஷயத்தில் நல்லெண்ணம் கொள்வதைக் காணலாம். இன்ஷாஅல்லாஹ்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُولُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمِ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.